முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1147

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.11.2022, சனிக்கிழமை

1. ஓம் எனும் சக்தியாய் உலகை ஆள
ஓங்கார குடில்படைத்த அரங்கா வாழ்க
ஆமென்று உன்வழி உலகோர் வர
அனைவருக்கும் ஞானியாகும் சக்தி அருள்வேன்என
2. என சுப்ரமணியர் யானும் இனிதே
இயம்பியே அரங்கன் நீ கேட்க
ஞானஅறிவுரை ஆசி தன்னை
நாட்டிடுவேன் சுபகிருது தேள்திங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 03 ம் நாள் 19.11.2022 சனிக்கிழமை)
3. தன்னிலே அரங்கனின் தவபலமே
தரணியை மாற்றும் என்பது உறுதிஉறுதி
அன்னதான அரங்கரின் சேவையே
அனைவருக்கும் ஜீவகாருண்யம் அருளும் என்பதும் உறுதிஉறுதி
4. உறுதி கொண்டு ஆறுமுகன் யான்
உன்னுள்ளே உயர்வாக ஆற்றலாக இணைந்து இனிதே
வருவோர்க்கு ஞானசித்தி அருள்வதோடு
வையகத்தை மாற்றும் சூட்சும சக்தி கூட்டிவர
5. வருகவே அரங்கன் திருவடி
வையகத்தை காக்கும் உயர்அடி ஆகும்
பெருமை கொண்டு அரங்கன் புகழை பாடி
பேருலகமெல்லாம் அன்னதானம் பரப்பி வர
6. வருகவே வையகம் தர்மலோகமாகி
வள்ளல் தன்மை கொண்ட அன்பர்கள் படையாக
ஆகவே அகிலமெங்கும் அரங்கன் வழி
ஆற்றல் மிக்க ஞானபடைகள் உருவாகி
7. ஆகியே உலகம் மாற்றம் காணும்
அரங்கரால் இந்த அற்புதம் நிகழும்
மகிழவே மக்களை நோக்கி ஆறுமுகன் யான்
மகாசக்தியாக மாதவசியாக தீட்சை பலம்தந்து
8. தந்துமே உலகை காத்து வர
தவசியின் அடையாளம் அறிமுகம் பெற்ற
பெற்றதொரு உலகோர் அனைவருமே
பிசகின்றி தேற்றம் பெறுவரப்பா

9. கற்ற ஞான வழிகள் மேலாக
கருணை கொண்டு அரங்கன் தர்மம் செய்தால்
செய்தாலே போதும் உலகுக்கு
செப்பிடுவேன் அழிவென்பது இல்லா வண்ணம்

10. மெய்ஞான நல்லுலகமாகி இனிதே
மேலவர்கள் ஆசிபட இந்த பேருலகம்
பேருலகம் அரங்கனால் தேற்றம் பெறும்
பிசகின்றி ஞானஆட்சி பெறும்

உறுதி தந்து ஆறுமுகன் யான் வழங்கிய உயர்வான ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–